1011

Register Number | | | | | |

# பகுதி I — தமிழ் — இரண்டாம் தாள்

(உரைநடை, துணைப்பாடம், செய்யுள் நயம் பாராட்டல், தமிழாக்கம், படைப்பாற்றல், மொழித்திறன்)

# Language — Part I — TAMIL — Paper II

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 80

*குறிப்பு* : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும் மற்றும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை எழுதுக : $3 \times 4 = 12$

1. தமிழ்மொழியின் மீது பற்றுகொள்ளாத தமிழ்மக்களைப் பரிதிமாற் கலைஞர் கடிந்துரைப்பது யாங்ஙனம் ?

2. நமது நாட்டில் நீண்டகாலமாக நிகழ்ந்துவரும் பெருங்கொலை என்று திரு.வி.க. வருந்தி உரைப்பனவற்றை எழுதுக.

3. கீட்ஸ், ஜான்ரஸ்கின், பவணந்தி முனிவர் ஆகியோர் கூறும் கவிதையின் இயல்புகள் யாவை ?

4. நம் முன்னோர்கள் நனிநாகரிகராய் விளங்கிய பான்மையை விளக்குக.

5. பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர் என்பதனை விளக்குக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் பத்து வரிகளின் மிகாது விடை தருக : $3 \times 4 = 12$

6. அறுமுறை வாழ்த்து - விளக்குக.

7. 'இரந்தும் உயிர்வாழ்தல்' என்று தொடங்கும் குறட்பாவில் பொதிந்துள்ள இலக்கிய நயங்களை விளக்குக.

8. முதல் தடுமாற்றம் என்று மு. வ. குறிப்பது யாது ?

9. செப்புத்திருமேனிகளின் பொற்காலம் எது ? ஏன் ?

10. தமிழகக் குடவரைக் கோவில்களைப் பற்றி எழுதுக.

III. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் இருபது வரிகளின் மிகாது விடை எழுதுக : $1 \times 6 = 6$

11. தமிழ் - உயர்தனிச்செம்மொழி - இத்தலைப்பின் கீழ்ப் பரிதிமாற் கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து எழுதுக.

12. வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாக அறநெறிச்சாரம் கூறுவன யாவை ?

IV. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் விடை எழுதுக : $2 \times 10 = 20$

13. *'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து'* அல்லது *'வேலி'* என்னும் சிறுகதையைக் கருப்பொருளும், சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

*அல்லது*

*'பால்வண்ணம் பிள்ளை'* அல்லது *'சட்டை'* என்னும் கதையில் இடம்பெறும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சியை நாடகமாக எழுதுக.

14. *'ஒவ்வொரு கல்லாய்'* அல்லது *'மண்'* என்னும் சிறுகதையில் நும் மனம் கவர்ந்த கதைமாந்தர் குறித்துத் திறனாய்வு செய்க.

*அல்லது*

*'பழிக்குப்பழி'* - இக்கதையில் வரும் கிட்டு, தமையன் தனக்குச் செய்த உதவிகளை நினைத்து மகிழ்வது போல ஒரு கதை எழுதுக.

*அல்லது*

நேர்மை தவறாத உனது நண்பன், அந்தப் பண்பில் தவறாது, வாழ்க்கையில் பாடுபட்டு உயர்ந்ததாக ஒரு கற்பனைக் கதை எழுதுக.

[ Turn over

V. 15. பின்வரும் செய்யுளைப் படித்துணர்ந்து, அதில் அமைந்துள்ள மையக் கருத்தை நயத்துடன் எடுத்துரைத்து, அதில் அமைந்துள்ள எதுகை, மோனை, இயைபு, முரண், அணி, சந்தச்சுவை, உவமை, உருவகம், கற்பனை ஆகியவற்றுள் ஏற்புடையவற்றைச் சுட்டி எழுதுக. 1 × 10 = 10

பாலைவனம் சோலைவன மாக வேண்டும்;

பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்;

சாலைகளிற் பலதொழிலும் பெருக வேண்டும்;

சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்;

சீலைஉடை கதருடையாய்த் திகழ வேண்டும்;

தேசபக்தி செழித்தோங்கி வளர வேண்டும்;

வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டும்;

வெற்றியின்மேல் வெற்றி எமக்கெய்த வேண்டும்.

– கவிமணி

VI. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் தமிழாக்கம் தருக. 3 × 2 = 6

16. Little drops of water make the mighty ocean.

17. A bad workman blames his tools.

18. Think before you speak.

19. Please confirm your exam. result by telephone.

20. An ideal teacher is a friend, philosopher and guide of the students.

21. Take up new challenges when they arise. New experiences will help you grow.

VII. 22. பின்வரும் பழமொழிகளுள் ஒன்றினை விளக்கும் வகையில், வாழ்க்கை நிகழ்வில் அமைத்துப் பத்து வரிகளில் எழுதுக. $1 \times 4 = 4$

அ) ''நெருப்பில்லாமல் புகையாது''

ஆ) ''தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்''

இ) ''குறைகுடம் கூத்தாடும்''

*அல்லது*

*'மயக்கும் மாலைப்பொழுது'* அல்லது *'மலை வீழ் அருவி'* என்னும் தலைப்பில் சிந்தித்து, உமது சொந்தப் படைப்பாகக் கவிதை ஒன்றை 8 அடிகளுக்குக் குறையாது 10 அடிகளுக்கு மிகாமலும் எழுதுக.

*அல்லது*

*குறிப்பு :* காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா

VI மற்றும் VII-ல் உள்ள வினாக்களுக்கு பதிலளிக்க பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து வினா எண் 16 முதல் 22 வரையில் உள்ளவற்றில் எவையேனும் ***ஐந்தனுக்கு*** மட்டும் விடை எழுதவும். $5 \times 2 = 10$

கடந்த ஒரு நூற்றாண்டில் கல்வியின் பயன், கற்கும் மக்கள்தொகை, அதன் முக்கியத்துவம் ஆகியவற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. 150 ஆண்டுகளுக்கு முன்பு வரை கூட கல்வி ஓர் அணியாக, அலங்காரப் பொருளாக, பண்பாட்டிற்கும் சமய ஒழுக்கம் உணர்வுகட்கும் உறைவிடமாக இருந்ததேயன்றி, மனிதனின் உணவு, உடை, உறைவிடம் ஆகிய அன்றாடத் தேவைகளைத் தீர்க்கும் கருவியாகவோ, அதற்குத் தேவையான ஒரு பொருளாகவோ இருக்கவில்லை. பொருளாதார வளர்ச்சி பெரும்பாலும் உடலுழைப்பின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், அதாவது 1900 - இல் அமெரிக்காவில் 20 பேரை எடுத்துக்கொண்டால் அவர்களில் 18 பேர் உடலுழைப்பாளிகள். இருவரே தாங்கள் கற்ற கல்வியின் அடிப்படையில் அலுவல் பார்த்தவர்கள். ஆனால் அதே நாட்டில் 1965 - இல் நிலைமை கணிசமாக மாறிவிட்டது. அந்த இருபது பேரில் 15 பேர் முறையாகக் கற்ற கல்வியின் அடிப்படையில் பெற்ற பயிற்சியைக் கொண்டு தொழில் செய்பவர்கள். ஐவர் மட்டுமே உடல் உழைப்பாளிகள். அந்த ஐவரில் ஒருவர் மட்டுமே உழவு செய்பவர். பொதுவாக கல்வி ஓர் அலங்காரப்பொருளாக, பண்பாட்டுச் சின்னமாக இருந்த நிலை மாறி, ஒரு சமுதாயத்தின் வாழ்விற்கு, அன்றாடத் தேவைகட்கு இன்றியமையாது வேண்டப்படும் ஒரு கருவியாக மாறிவிட்டது.

*வினாக்கள் :*

16. 150 ஆண்டுகளுக்கு முன்பு கல்வி எப்படி இருந்தது ?

17. பொருளாதார வளர்ச்சி பெரும்பாலும் எதன் அடிப்படையில் அமைந்திருந்தது ?

18. 1900 - இல் அமெரிக்காவில், கற்ற கல்வி அடிப்படையில் பணிபுரிந்தவர்கள் எத்தனை பேர் ?

19. 1965 - இல் அமெரிக்காவில் முறையாகக் கற்ற கல்வி அடிப்படையில் தொழில் செய்தவர்கள் எத்தனை பேர் ?

20. உடல் உழைப்பாளிகள் எத்தனை பேர் ?

21. உடல் உழைப்பாளிகளில் உழவு செய்பவர் எத்தனை பேர் ?

22. கல்வியின் இன்றைய நிலை என்ன ?

VIII. பின்வரும் வினாக்களுக்கு அடைப்புக் குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு விடை எழுதுக:

$10 \times 1 = 10$

23. கண்ணன் முருகன் மற்றும் வேலன் வந்தனர்.

( வாக்கியப் பிழையைத் திருத்துக )

24. வெந்தய செடிகளின் மேல் மின்னிடும் தங்க பூக்கள்

( தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக )

25. வளை - வழை *அல்லது* துணி - துனி

( பொருள் வேறுபாட்டை உணர்த்தும் வகையில் தனித்தனி வாக்கியங்களில் அமைத்தெழுதுக )

26. என் மம்மியும் டாடியும் ஈவினிங்கில் வாக்கிங் போவார்கள்.

( பிறமொழிச் சொற்கலப்பை நீக்கி இனிய தமிழில் எழுதுக)

27. நஞ்சையும் புஞ்சையும் காஞ்சிப் போயின.

( கொச்சையான வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக)

28. 'நமஸ்காரம்' என்று சாஷ்டாங்கமாக விழுந்தவனை ஆசீர்வதித்தேன்.

( பிறமொழிச் சொற்கலப்பை நீக்கி நல்ல தமிழில் எழுதுக)

29. கபிலப்பரணர் வளர்ப்பிறை ஒளியில் சுடுச்சோறும் காய்க்கறியும் உண்டனர்.

( தேவையற்ற இடங்களில் அமைந்த வல்லின மெய்களை நீக்கி எழுதுக)

30. யானை மேய்ப்பனோடு ஆட்டுப்பாகனும் வந்தான்.

( மரபு வழுக்களை நீக்கி எழுதுக)

[ Turn over

31. பல்லியில் மனி ஒளித்ததும் மாணவர்கள் களைந்தனர்.

( எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக)

32. கவிதை இது அல்ல இது அல்ல என எளிதில் கூறி விடலாம் ஆனால் இன்னதுதான் கவிதை என்று வரையறுத்தல் எளிதல்ல என்று ஜான்சன் பதில் கூறினாராம்.

( பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டெழுதுக).